# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 13 | 4 Pages | 14.08.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 13 | 4 பக்கங்கள் | 14.08.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## 'ஊட்டச்சத்தை உறுதிசெய்' திட்டம் வெற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தகவல்

சென்னை, ஆக. 14

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் நாம் நல்ல நிலையில் இருக்கிறோம், நிலையை மாற்ற வேண்டும் என உடனே தொடங்கப்பட்ட திட்டம் தான் “ஊட்டச்சத்தை உறுதி செய்”.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: பல்வேறு மாவட்டங்களுக்கு நான் ஆய்வுப் பணிகளுக்கு செல்லும்போது, ஓர் அங்கன்வாடி மையத்தில், மிகவும் மெலிந்த ஒரு குழந்தையைப் பார்த்தேன்.

அதற்கு காரணம் என்ன வென்று கேட்டபோது, ஊட்டச்சத்துக் குறைபாடு என்றார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் நாம் நல்ல நிலையில் இருக்கிறோம் என்று நான் சமாதானம் அடைய விரும்பவில்லை. அந்த நிலையை மாற்ற வேண்டும் என உடனே தொடங்கப்பட்ட திட்டம் தான் "ஊட்டச்சத்தை உறுதிசெய்". இந்த திட்டம் வெற்றி அடைந்து வருகிறது.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

## பாகிஸ்தானில் சீன தொழிலாளர்களை குறிவைத்து பயங்கரவாத தாக்குதல்



புதுடெல்லி, ஆக. 14

சீனாபாகிஸ்தான் பொருளாதார வழித்தட திட்டமானது (சிபிஇசி) சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தை பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில்உள்ளகுவாடர்துறைமுகத்துடன்இணைக்கும்மிகப்பெரிய திட்டமாகும். இந்த திட்டப் பணிகளில் சீனாவைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள்ஈடுபட்டுள்ளனர்.இந்ததிட்டத்தைசெயல்படுத்துவதற்கு பாகிஸ்தானில் பாகிஸ்தானில் செயல்படும் பலுசிஸ்தான் விடுதலை ராணுவம் (பிஎல்ஏ) என்ற அமைப்பு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. சீன அரசாங்கம் தங்கள் பிராந்தியத்தில் முதலீடு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்த முதலீடுகளால் உள்ளூர் மக்களுக்கு எந்த பயனும் இல்லை என்றும் கூறி அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்நிலையில் குவாடர் துறைமுகத்தில் உள்கட்டமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளசீனபொறியாளர்களைகுறிவைத்துதீவிரவாதிகள்தாக்குதல் இன்று நடத்தினர். அவர்களுக்கு பாதுகாப்பு படையினர் பதிலடி கொடுத்தனர். இந்த சண்டையில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக தகவல்வெளியாகிஉள்ளது.சீனபொறியாளர்கள்தரப்பிலோ,பாகிஸ்தான் மக்கள் தரப்பிலோ யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு பலூசிஸ்தான் விடுதலை ராணுவம்பொறுப்பேற்றுள்ளது.பிஎல்ஏவின்மஜீத்பிரிகேட்பிரிவு இன்று குவாடரில் சீன பொறியாளர்களின் வாகனங்களை குறிவைத்து தாக்கியதாகவும், தாக்குதல் தொடர்வதாகவும் பிஎல்ஏ கூறி உள்ளது.

## 76வது சுதந்திர தின விழா: டெல்லி செங்கோட்டையில் உச்சகட்ட பாதுகாப்பு டிரோன்கள் பறக்க தடை




டெல்லி, ஆக. 14

நாட்டின் 76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வருகிற 15ந்தேதி (செவ்வாக்கிழமை) டெல்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திரமோடி 9வது முறையாக தேசிய கொடி ஏற்றுகிறார். விழாவில் முப்படை அணிவகுப்பை பிரதமர் நரேந்திரமோடி பார்வையிடுகிறார். தொடர்ந்து தேசியக்கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்படும். பின்னர் கலை, கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும். தொடர்ந்து மூவர்ண பலூன்கள் வானில் பறக்க விடப்படும். விழாவில் நாடு முழுவதும் இருந்து சுமார் 1,800 சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொள்கின்றனர். இதற்காகடெல்லிசெங்கோட்டையைசுற்றிபாதுகாப்புஅதிகரிக்கப்பட்டு உள்ளது. செங்கோட்டையில் இருந்து 300 மீட்டருக்குள் துணை ராணுவப்படை நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் தேசிய பாதுகாப்புப்படை, சிறப்புப் பாதுகாப்புக்குழு, மத்திய ஆயுதக் காவல் படைகள் மற்றும் டெல்லி போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். சுதந்திர தினத்தன்றுடெல்லிவிமானநிலையத்தில்திட்டமிடப்படாதவிமானங்கள் புறப்படுவதற்கும் தரை இறங்குவதற்கும் சில மணி நேரம் தடைவிதிக்கப்படும். எனினும் வழக்கமாக செல்லும் விமானங்கள் புறப்பட எந்த பாதிப்பும் இருக்காது. இந்திய விமானப்படை, எல்லைப் பாதுகாப்புப்படை மற்றும் ராணுவ விமானப் படையின் ஹெலிகாப்டர்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தாது. இது தவிர, கவர்னர்கள் மற்றும் முதல்மந்திரிகள் பயணம் செய்யும் மாநில ஹெலிகாப்டர்கள் அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. டெல்லியில் ஆகஸ்ட் 16ந்தேதி வரை டிரோன்கள் மற்றும் பாராகிளைடிங் தடை செய்யப்பட்டுள்ளது. செங்கோட்டை மற்றும் ராஜ்காட் உள்ளிட்ட பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. செங்கோட்டையின் வாயில்களுக்கு உள்ளேயும் வெளியேயும் போலீசார் பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளனர். 10 ஆயிரம் பாதுகாப்பு வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். தற்காலிக கட்டுப்பாட்டு அறை மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகள் கண்காணிக்கப்பகின்றன. செங்கோட்டைப் பகுதியைச் சுற்றியுள்ள 300க்கும் மேற்பட்ட கட்டிடங்களில் தொலைநோக்கியுடன் போலீசார் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதனிடையே பல இடங்களில் பாதுகாப்பு குறைபாடு கண்டறியப்பட்டதால் கூடுதல் பாதுகாப்பு வழங்க உயர் அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜி20 உச்சி மாநாடு டெல்லியில் நடைபெறுகிறது. இதில் பல்வேறுநாட்டு தலைவர்கள் பங்கேற்கிறார்கள். இந்த மாநாடு சுதந்திர தின முக்கிய கருப்பொருளாக உள்ளது. சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜம்முகாஷ்மீரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. துணை ராணுவம் மற்றும் போலீசார் முக்கிய இடங்களில் ரோந்து சென்று வருகிறார்கள். ஸ்ரீநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வாகன சோதனையும் நடைபெற்று வருகிறது. டிரோன்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தீவிரவாதிகள் சதி வேலைகளில் ஈடுபடாமல் தடுக்க எல்லையில் வீரர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். சுதந்திர தின விழாவையொட்டி டெல்லி செங்கோட்டையில் இன்று அணிவகுப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. பிரதமருக்கான இடத்தில் அதிகாரி ஒருவர் நின்று அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார். முப்படை வீரர்கள் மிடுக்குடன் அணி வகுத்துச் சென்றனர். இதையொட்டி டெல்லியில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது.

## சுதந்திரதின விழாவை முன்னிட்டு சென்னை கோட்டையில் போலீஸ் அணிவகுப்பு ஒத்திகை

சென்னை, ஆக. 14

சுதந்திர தினவிழாவில் காவல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. சுதந்திரதினத்தன்று முதலமைச்சரை காவல்துறை வாகன அணி வகுப்புடன் அழைத்து வருவது போன்று ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது.

76வது சுதந்திர தின விழா நாளை மறுநாள் (15ந்தேதி) நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. சென்னை காமராஜர் சாலையில் கோட்டை கொத்தளத்தில் நடைபெறும் சுதந்திர தின நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடி ஏற்ற உள்ளார். இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன. சுதந்திர தினவிழாவில் காவல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதையொட்டி இதற்கான இறுதி ஒத்திகை நிகழ்ச்சி இன்றுசென்னைகோட்டை கொத்தளத்தில் நடந்தது. இதில்



போலீசார் சீருடையில் அணி வகுத்தனர். இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் சுதந்திரதினத்தன்று முதலமைச்சரை காவல்துறை வாகன அணி வகுப்புடன் அழைத்து வருவது போன்று ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து கமாண்டோ படை, குதிரைப் படை, பெண் காவலர்கள் உள்ளிட்ட 7 படைப்பிரிவினர் பங்கேற்ற அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டு தேசிய கொடியைஏற்றி பேசுவது போன்று ஒத்திகைநிகழ்ச்சி நடந்தது. அதன் பின் தகைசால் தமிழர் விருது, ஏபிஜே அப்துல்கலாம் விருது, துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா உள்ளிட்ட விருதுகள் வழங்குவது போன்று ஒத்திகை நடந்தது. இதையொட்டி காமராஜர் சாலை பகுதியில் போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்டு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. காலை 8 மணி முதல் ஒத்திகை நிகழ்ச்சி முடிவடைந்த 10 மணி வரையிலும் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. நேப்பியர்பாலம் முதல் போர்நினைவுச் சின்னம் வரை உள்ள காமராஜர் சாலை, போர்நினைவுச்சின்னத்தில் இருந்து ரிசர்வ் வங்கி சுரங்கப்பாதை வடக்கு பகுதி வரை உள்ள ராஜாஜி சாலை, கொடிமரச் சாலைகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டது போலீசாரின் அணி வகுப்பு ஒத்திகையையொட்டி இன்று சென்னை தலைமைச்செயலகம்அமைந்துள்ள கோட்டை கொத்தளம், மற்றும் காமராஜர் சாலை முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இதில் ஏராளமான போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

## ரூ.1.92 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்

காங்கயம், ஆக. 14

ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் 42 புதிய திட்டப்பணிகளை அமைச்சர் தொடங்கி வைத்தார். படியூர் ஊராட்சிஒன்றியதுவக்கப்பள்ளியில் புதிய வகுப்பறை கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலசமுத்திரம்புதூர், சிவன்மலை, படியூர், பாப்பினி, வீரணம்பாளையம் மற்றும் தம்மரெட்டிபாளையம் ஆகிய ஊராட்சி பகுதிகளில் ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் 42 புதிய திட்டப்பணிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன் தலைமையில், தமிழக செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். பின்னர் அமைச்சர்கூறியதாவது: காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலசமுத்திரம்புதூர் ஊராட்சி




அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் அய்யனாரப்பன் குட்டை புனரமைக்கும் பணி, ரூ.1.80 லட்சம் மிதிப்பீட்டில் ரெட்டிபாளையம் காலனியில் ஆயில் மில் அருகில் 1வது குறுக்கு வீதியில் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைக்கும் பணி, ரூ.9.10லட்சம் மதிப்பீட்டில் கத்தாங்கன்னியில் புதிய கதிரடிக்கும் களம் அமைக்கும் பணி , ரூ.13.16 லட்சம் மதிப்பீட்டில் ரெட்டிபாளையத்தில் புதிய நியாய விலைக்கடை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் 42 புதிய திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் படியூர் ஊராட்சியில் கனிமம் மற்றும் சுரங்க நிதியிலிருந்து ரூ.19.60 லட்சம் மதிப்பீட்டில் படியூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் புதிய வகுப்பறை கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில் காங்கயம் யூனியன் சேர்மன் மகேஸ்குமார், தெற்கு ஒன்றிய செயலாளர் சிவானந்தன், சிவன்மலை பஞ்சாயத்து தலைவர் துரைசாமி, துணை தலைவர் சண்முகம், வார்டு உறுப்பினர் சிவகுமார், படியூர் பஞ்சாயத்து தலைவர் ஜீவிதா சண்முக சுந்தரம் உள்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## வெள்ளகோவில் வார சந்தையில் தக்காளி ரூ.50க்கு விற்பனை


வெள்ளகோவில், ஆக. 14

வெள்ளகோவிலில் ஞாயிறுதோறும் வாரச்சந்தை செயல்படுகிறது. வெள்ளகோவில் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் கிடைக்கும் காய்கறிகள் மற்றும் பயிர் வகைகளை கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். இதை பொதுமக்கள் மற்றும் நூல் மில்களில் தங்கி வேலை செய்யும் ஊழியர்கள் தங்களுக்கு ஒரு வாரத்திற்கு தேவையான காய்கறி மற்றும் மளிகை சாமான்களை வாங்கிச்செல்வார்கள். இன்று வார சந்தையில் தக்காளி ஒரு கிலோ ரூ.50, கத்தரிக்காய் ரூ.55, பீர்க்கங்காய் ரூ.50, பெரிய வெங்காயம் ரூ.25 ,சின்ன வெங்காயம் ரூ. 55, உருளைக்கிழங்கு ரூ.40, பீட்ரூட் ரூ.60, புடலங்காய் ரூ.60, முட்டை கோஸ் ரூ.30, பீன்ஸ் ரூ.80, கேரட் ரூ.60, பாவற்காய் ரூ.60,வெண்டைக்காய் ரூ.60, இஞ்சி ரூ.200, அவரைக்காய் ரூ.80, நேரோ காய் ரூ. 40, கோவக்காய் ரூ.40, முள்ளங்கி ரூ.60, பச்சை மிளகாய் ரூ.80, சுரக்காய் ரூ.15க்கும் விற்பனைசெய்யப்பட்டது. வாரச்சந்தை காய்கறி வியாபாரி தெரிவித்தார்.

## மத்திய பஸ் நிலையத்தில் பயணிகளின் உடைமைகளை சோதனை செய்ய நவீன கருவி

திருப்பூர், ஆக. 14

திருப்பூர்மத்தியபஸ்நிலையத்தில் மாநகர காவல்துறை சார்பில் பயணிகளின் உடமைகளை ஸ்கேனிங் செய்யும் நவீன எந்திரம் ரூ.12 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நடைபெற்றது. திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன்குமார் அபினபு



நவீன எந்திரத்தை தொடங்கி வைத்தார்.

சந்தேகத்துக்கு இடமான நபர்கள்கொண்டுவரும்உடைமைகளை எந்திரத்தின் வழியாக ஸ்கேன் செய்து பார்க்கும்போது உள்ளே, தடை செய்யப்பட்ட பொருட்கள், போதை பொருட்கள் இருப்பதை கண்டறியும் வகையில் கருவி நிறுவப்பட்டுள்ளது. இதுகுறித்து மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன்குமார்அபினபுகூறும்போது, "தடை செய்யப்பட்ட பொருட்கள், ஆயுதங்கள் இருந்தால் கண்டுபிடிக்க முடியும். கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களையும் கண்டறியலாம்" என்றார்.

# பல்லடத்தில் குப்பைக்கு தீ வைத்த மர்ம நபர்கள்



பல்லடம், ஆக. 14

ஒரு ஏக்கர் அளவிலான இடத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. சம்பவ இடம் வந்த தீயணைப்புத்துறையினர் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர்.

பல்லடம் மாணிக்காபுரம் ரோட்டில் உள்ள பெரியார்நகர்பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இறைச்சி கடைகள் உள்ளது. இதன் பின்புறம் சுமார் ஒரு ஏக்கர் அளவிலானஇடத்தில்குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று இரவு மர்ம ஆசாமிகள் சிகரெட் புகைத்து விட்டு குப்பைகளின் மேல் வீசிச் சென்றதாக கூறப்படுகிறது.

இதனால் மளமளவென பற்றியதீகொளுந்துவிட்டு எரிந்து அந்த பகுதியில் புகை மண்டலமாக மாறியது. இதுகுறித்து பல்லடம் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடம் வந்த தீயணைப்புத்துறையினர் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர். இதனால் அக்கம் பக்கம் உள்ள வீடுகள் தீ விபத்தில் இருந்து தப்பியது. குப்பைக்கு தீ வைத்த மர்ம நபர்கள் குறித்து பல்லடம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். தீவிபத்து குறித்து தகவல் கிடைத்தவுடன் உடனடியாக சம்பவ இடம் வந்து தீயை அணைத்த தீயணைப்பு துறையினரை பொதுமக்கள் பாராட்டினர்.

# போலீஸ் நிலையங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளில் குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும்: எஸ்.பி. உத்தரவு



தருமபுரி, ஆக. 14

தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து போலீஸ் நிலையங்களிலும் பதிவு செய்யப்படும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும். போலீஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் போதுமானதாகஉள்ளதா? எனறும் கேட்டு அறிந்தார்.

தருமபுரி மாவட்ட காவல்துறையின் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் தருமபுரியில் உள்ள மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டீபன் ஜேசுபாதம் தலைமை தாங்கினார். கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் இருந்து காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு அந்தந்த போலீஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் தற்போதைய நிலை குறித்து விளக்கிக் கூறினர். சம்பந்தப்பட்ட வழக்கு களில் குற்றப்பத்திரிக்கை சரியான முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என ஆய்வுமேற்கொள்ளப்பட்டது. கூட்டத்தில் போலீஸ் சூப்பிரண்டு ஸ்டீபன் ஜேசு பாதம் பேசுகையில், தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து போலீஸ் நிலையங்களிலும் பதிவு செய்யப்படும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும். மேலும் அந்தந்த காவல் நிலையங்களில் தேடப்படும் குற்றவாளிகளின் பட்டியல் எடுத்து உடனடியாக அவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தேங்கியுள்ள பழைய வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தந்த பகுதிகளில் சட்டம் ஒழுங்கை முறையாக பராமரிக்க சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். முன்னதாக தர்மபுரி மாவட்ட காவல் துறை சார்பில் போலீஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள போக்குவரத்து வாகனங்கள், வேன்கள், கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் முறையாக பராமரிக்கப்படுகிறதா? அந்த வாகனங்களின் தற்போதைய செயல் திறன் குறித்தும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டீபன் ஜேசுபாதம் ஆய்வு மேற்கொண்டார். மேலும் போலீஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் போதுமானதாக உள்ளதா? எனறும் கேட்டு அறிந்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு இளங்கோவன், உட்கோட்ட துணை போலீஸ் சூப்பிரண்டுகள் செந்தில் குமார், நாகலிங்கம், மகாலட்சுமி, சிந்து மற்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்இன்ஸ்பெக்டர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை அ.தி.மு.க. மாநாட்டிற்கு குடும்பத்துடன் திரண்டு வர வேண்டும்: மாவட்ட செயலாளர் எஸ்.பி.சண்முகநாதன் பேச்சு



தூத்துக்குடி, ஆக. 14

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் வருகிற 20ந் தேதி மதுரையில் நடைபெறும் வீர வரலாற்றின் பொன்விழா எழுச்சி மாநாட்டிற்கு செல்வது குறித்த தூத்துக்குடி தெற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைகூட்டம்தூத்துக்குடியில் நடைபெற்றது. இதில் தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. சண்முகநாதன்தலைமைதாங்கிபேசியதாவது: மதுரையில் நடைபெறும் அ.தி.மு.க. மாநாட்டிற்கு அதிக அளவில் கட்சி நிர்வாகிகள் செல்வது குறித்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும். ஜெயலலிதா காலத்தில் 1½ கோடி தொண்டர்களாக இருந்ததை தற்போது பொதுசெயலாளர் எடப்பாடியார் 2 கோடியே 47 ஆயிரம் உறுப்பினர்களாக அதிகரித்துள்ளார். உலகளவில் தரவரிசை பட்டியலில் 7வது பெரிய கட்சியாக அ.தி.மு.க. உருவாகி உள்ளது. நாம் தற்போது எதிர்க்கட்சியாக இருந்தாலும் தொண்டர்களின் உற்சா கத்துடன் செயல்படுவதன் காரணமாக விரைவில் தி.மு.க. அரசு வீட்டிற்கு அனுப்பப்படும். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்த மாநாடு அமையும். கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மதுரையில் நடைபெறும் அ.தி.மு.க. எழுச்சி மாநாட்டி ற்கு குடும்பத்துடன் திரண்டு வர வேண்டும். எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காத தொண்டர்கள் அ.தி.மு.க.வில் உள்ளதால் யாராலும் அதனை அழிக்க முடியாது. இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் அமைப்பு செயலாளர் என். சின்னத்துரை, மாவட்ட அவைத்தலைவர் வக்கீல் திருப்பா ற்கடல், மாநில அமைப்பு சாரா ஓட்டுநரணி இணை செயலாளர் பெருமாள்சாமி, மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் சுதாகர், முன்னாள் நகர்மன்ற தலைவர் ஹென்றி, தமிழ்நாடு புதுச்சேரி பார்கவுன்சில் உறுப்பினர் வக்கீல் பிரபு, மாவட்டதுணைச்செயலாளர்கள் சந்தனம், தெற்கு மாவட்ட வர்த்தக அணி பொருளாளர் சுகுமார், ஸ்ரீவைகு ண்டம் யூனியன் சேர்மன்வசந்தாமணி, ஒன்றிய செயலாளர்கள் காசிராஜன், விஜயகுமார், ராஜ்நாரயணன், சவுந்தரபாண்டி, பகுதி கழக செயலாளர்கள், முன்னாள் துணை மேயர் சேவியர், முருகன், ஜெய்கணேஷ், நட்டார் முத்து, தெற்கு பகுதி அம்மா பேரவை செயலாளர் சுடலைமணி, சார்பு அணி செயலாளர்கள் தட்டார்மடம் ஞானபிரகாசம், டாக்டர் ராஜசேகர், யு. எஸ்.சேகர், டேக் ராஜா, நடராஜன், பில்லாவிக்னேஷ், தனராஜ், பிரபாகர், அருண்ஜெபக்குமார், சுதர்சன்ராஜா, நகர செயலாளர்கள் காயல் மவுலானா, மகேந்திரன், பேரூராட்சி செயலாளர்கள் ரவிச்சந்திரன், காசிராஜன், செந்தில்ராஜகுமார், துரைச்சாமி ராஜா, அசோக்கு மார், கிங்சிலிஸ்டார்லின், ஆறுமுகநயினார், வேதமாணிக்கம், பொதுக்குழு உறுப்பினர் அய்யாதுரை பாண்டியன், மாநகராட்சி எதிர்கட்சி கொறடா வக்கில் மந்திர மூர்த்தி, மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற இணை செயலாளர் சத்யாலெட்சுமணன், எம். பெருமாள், எம்.ஜி.ஆர். இளைஞரணிதுணைசெயலாளர் வலசை வெயிலுமுத்து, வக்கில்கள் சுகந்தன்ஆதித்தன், ஆண்ட்ரு மணி, முனியசாமி, சரவணபெருமாள், பிள்ளை விநாயகம்,பகுதி இளைஞரணி செயலாளர் திருச்சிற்றம்பலம், துணை செயலாளர் டைகர் சிவா,வட்ட செயலாளர்கள் முருகன், மணிகண்டன், மற்றும் பாலஜெயம், சாம்ராஜ், சகாயராஜா உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர்.

# பெருந்துறை அருகே தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்து 11 மாத ஆண் குழந்தை பலி

பெருந்துறை, ஆக. 14

குழந்தையை பரிசோதித்த டாக்டர் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஈரோடு பெருந்துறை அடுத்த கருமாண்டி செல்லி பாளையம், காஞ்சிக்கோவில் ரோடு தாய் நகரை சேர்ந்தவர் சதீஷ்குமார். இவரது மனைவி நாகமணி. இவர்களுக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். 2வது ஆண் குழந்தை ஆகாஷ் (11 மாதம்). சதீஷ் குமார் பனியன் கம்பெனியில் டெய்லராக வேலை பார்த்து வருகிறார். இந்நிலையில் நாகமணி டியூசனில் படிக்கும் முதல் மகனை கூப்பிட சென்று விட்டார். வீட்டில் சதீஷ்குமார் மற்றும் 11 மாத ஆண் குழந்தை ஆகாஷ் மற்றும் இருந்தனர். சதீஷ்குமார் அலுப்பில் தூங்கிவி ட்டார். 11 மாத குழந்தை ஆகாஷ் வீட்டில் விளையாடி கொண்டிருந்தான். அப்போது வீட்டில் 20 லிட்டர் தண்ணீர் பிடிக்கும் வாளி இருந்துள்ளது. அந்த வாளியில் தண்ணீரும் இருந்துள்ளது. அப்போது ஆகாஷ் வாளியை பிடித்து எழுந்து நிற்க முயன்று உள்ளான். அப்போது எதிர்பாராத விதமாக குழந்தை ஆகாஷ் வாளிக்குள் தவறி விழுந்து விட்டான். இதை யாரும் கவனிக்கவில்லை. டியூசனுக்கு சென்று தனது முதல் மகனை அழைத்து வந்தநாகமணிவீட்டிற்குள் வந்துள்ளார். அப்போது வீட்டில் குழந்தை ஆகாஷ் தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்து இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அவர் கூச்சலிட்டதை கேட்டு சதீஷ்குமார் பதறி அடித்துக்கொண்டு ஓடி வந்தார். பெற்றோர் குழந்தையை மீட்டு சிகிச்சைக்காக கருமாண்டி செல்லி பாளையத்தில் உள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். குழந்தையை பரிசோதித்த டாக்டர் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தார். இதைக் கேட்டு பெற்றோர் கதறி அழுதனர். இது குறித்து பெருந்துறை போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்து 11 மாத ஆண் குழந்தை இறந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஆட்டோ டிரைவர் தீக்குளித்து சாவு: தற்கொலைக்கு தூண்டியதாக வீட்டு உரிமையாளர் கைது

திருப்பூர், ஆக. 14

திருப்பூர் வெள்ளியங்காட்டை சேர்ந்தவர் சிவக்குமார் (வயது 48). பனியன் நிறுவனத்தில் டெய்லராக உள்ளார். இவருடைய வீட்டில் ஆட்டோ டிரைவர் வீரமணிகண்டன் (34) என்பவர் குடும்பத்துடன் வாடகைக்கு குடியிருந்து வந்தார்.

தொழில் சரிவர இல்லாததால் கடந்த 2 மாதமாக வீட்டு வாடகை செலுத்தாமல் வீரமணிகண்டன் இருந்துள்ளார். இதுகுறித்து சிவக்குமார் அவரிடம் வாடகை கேட்டு சத்தம் போட்டதாக தெரிகிறது. இதனால் மனம் உடைந்த வீரமணிகண்டன் கடந்த 1ந் தேதி தீக்குளித்து இறந்தார். இது குறித்து திருப்பூர் தெற்கு போலீசார் தற்கொலைக்கு தூண்டிய பிரிவின் கீழ் வீட்டு உரிமையாளர் சிவக்குமார் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள்.

இந்தநிலையில் சிவக்குமாரை தெற்கு போலீசார் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

# அமைச்சர் செந்தில் பாலாஜியின் தம்பி அசோக் குமாரை கைது செய்தது அமலாக்கத்துறை





சென்னை, ஆக. 14

பல முறை நோட்டீஸ் அனுப்பியும் விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்தார். அசோக் குமார் நாட்டை விட்டு வெளியேறாத வகையில் அமலாக்கத்துறை லுக் அவுட் நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை கைது செய்தது. அப்போது அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டதால் அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதன்பிறகு உடல் நிலை சீரடைந்ததையடுத்து புழல் சிறைக்கு மாற்றப்பட்டார். இதையடுத்து அவரை காவலில் எடுத்து அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். விசாரணைக்கு பிறகு அவர் நேற்று சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருடைய நீதிமன்ற காவல் வரும் 25ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இததற்கிடையே சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் குமார் மீதும் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்திருந்தது. அவரை விசாரணைக்கு ஆஜராகும்படி அமலாக்கத்துறை பல முறை நோட்டீஸ் அனுப்பியது. ஆனால், அவர் விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்தார். இதனை தொடர்ந்து அசோக் குமார் நாட்டை விட்டு வெளியேறாத வகையில் அமலாக்கத் துறை லுக் அவுட் நோட்டீஸ் அனுப்பியிருந்தது. அவரது மனைவி பெயரில் கட்டப்பட்டு வரும் வீட்டிலும் அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்நிலையில், அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர்அசோக்குமாரை அமலாக்கத்துறை இன்று கைது செய்தது. கேரள மாநிலம் கொச்சி விமான நிலையத்தில் வைத்து அசோக் குமாரை அமலாக்கத்துறை கைது செய்துள்ளது. அவரைசென்னைக்கு அழைத்து வந்து விசாரணை நடத்த உள்ளனர்.

# மாணவர்கள் இடையே சாதி ரீதியான வெறுப்பை தூண்டக்கூடாது: ஜி.கே.வாசன் கோரிக்கை

சென்னை, ஆக. 14

வருங்காலங்களில் இது போன்ற அசம்பாவிதங்களும்; எண்ணங்களும் ஏற்படாதவாறு அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மாணவர் சமுதாயம் வருங்கால இந்தியாவை உருவாக்க கூடிய சமுதாயம். தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: நாங்குநேரியில் நடந்த சம்பவம் சாதிப் பிரச்சினை அடிப்படையில் நடந்துள்ளது. குறிப்பாக மாணவர்களிடையே இது போன்ற உணர்வு ஏற்படக் கூடாது. இந்த சம்பவம் மிகுந்த வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கிறது. மாணவர்களிடையே சாதி ரீதியான வெறுப்புணர்வை யாரும் தூண்டக் கூடாது. இது போன்ற சம்பவங்களும், எண்ணங்களும் நாட்டை பின்நோக்கி தள்ளி விடும், நாட்டின் வளர்ச்சியை பாதிக்கும். வருங்காலங்களில் இதுபோன்ற அசம்பாவிதங்களும்; எண்ணங்களும் ஏற்படாதவாறு அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அரசு பள்ளிக் கல்வித்துறையும் சரி, அரசு பள்ளியின் தலைமையும் சரி இதுபோன்ற சம்பவங்களில் தொடர் கண்காணிப்புத் தேவை. மாணவர் சமுதாயம் வருங்கால இந்தியாவை உருவாக்க கூடிய சமுதாயம். அரசும், பெற்றோர்களும,; ஆசிரியர்களும் அவர்களை நல்வழிப் படுத்தக் கூடிய, நன்மைபயக்க கூடிய வழிமுறைகளை போதிக்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மாட்டுத்தாவணி பஸ் நிலையத்தை புதுப்பிக்கும் பணிகள் விரைவில் தொடக்கம்




மதுரை, ஆக. 14

மாட்டுத்தாவணி பஸ் நிலையத்தைபுதுப்பிக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படுகிறது. ஆம்னி பஸ் நிலையமும் சீரமைக்கப்படுகிறது.

மதுரை மட்டுமல்லாது தென் தமிழகத்தின் முக்கிய பஸ் நிலையமாகவும், சந்திப்பு மையமாகவும் மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த எம்.ஜி.ஆர். பஸ் நிலையம் உள்ளது. தினமும் லட்சக்கணக்கான மக்கள் இந்த பஸ் நிலையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். மதுரை நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்ததால், 3 இடங்களில் செயல்பட்டு வந்த பேருந்து முனையங்களுக்கு மாற்றாக மாட்டுத்தாவணியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்அமைக்கமுடிவு செய்யப்பட்டது. மதுரை மாநராட்சி சார்பில் ரூ.10 கோடி செலவில், சுமார் 10 ஏக்கர் பரப்பில் இந்த பஸ் நிலையம் அமைக்கப்பட்டு 1999ம் ஆண்டில் திறக்கப்பட்டது. இது ஐஎஸ்ஓ 9001:2000 தரச் சான்று பெற்ற பஸ் நிலையமாகும். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் இங்கிருந்து பஸ்கள் இயக்கப்படுகின்றன. தற்போது எட்டு பகுதிகளாக இந்த பஸ் நிலையம் பிரிக்கப்பட்டுள்ளது. முதல்தடத்தில் சென்னை, கடலூர், நெய்வேலி , சிதம்பரம், பெங்களூரு, மைசூர், திருப்பதி, எர்ணாகுளம், திருவனந்தபுரம் மற்றும் பிற மாநிலங்களுக்கான பஸ்களும், 2வது தடத்தில் திருச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம், அரியலூர் மற்றும் பெரம்பலூர், 3வது தடத்தில் சிவகங்கை, தோண்டி, கொட்டைபட்டினம், தஞ்சாவூர், சிதம்பரம்,கும்பகோணம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் கர்நாடக பஸ்களும், 4வது தடத்தில் காரைக்குடி, வேதாரண்யம், வேளாங்கண்ணி, தேவகோட்டை, மேலூர், அறந்தாங்கி, பட்டுகோட்டை, பொன்னமராவதி, சிங்கம்புணரி பஸ்களும், 5வது தடத்தில் ராமநாதபுரம், ஏர்வாடி, ராமேஸ்வரம், பரமக்குடி, சாயல்குடி, கமுதி, கீழக்கரை பஸ்களும், 6வது தடத்தில் ராசபாளையம், தென்காசி, செங்கோட்டை, ஸ்ரீவில்லி புத்தூர், சங்கரன்கோவில், பாபநாசம் மற்றும் கடையநல்லூர் பஸ்களும், 7வது தடத்தில் அருப்புக்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், சிவகாசி, சாத்தூர், விருதுநகர் மற்றும் விளாத்திகுளம் பஸ்களும், 8வது தடத்தில் திருநெல் வேலி, கன்னியாகுமரி, நாகர்கோவில், கோவில்பட்டி, களியக்காவிளை, வள்ளியூர் மற்றும் கேரள மாநில பஸ்களும் இயக்கப்படு கின்றன. போலீஸ் அவுட் போஸ்ட், தாய்மார்கள் ஓய்வறை, டிக்கெட் முன்பதிவு மையங்களும் இங்கு உள்ளது. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் இங்கிருந்து பஸ்கள் இயக்கப்பட்டதால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தது. இதையடுத்து ஆம்னி பஸ்களுக்கென 2014ம் ஆண்டு தனி பஸ் நிலையம் அமைக்கப்பட்டது. இங்கிருந்து சென்னை, பெங்களூர், திருப்பதி, மங்களூர் மற்றும் வெளி மாநிலங்களுக்கும், முக்கிய நகரங்களுக்கும் தனியார் ஆம்னி பஸ்கள் இயக்கப்படுகின்றன. இந்த நிலையில் தற்போதைய பஸ் நிலையம் அமைக்கப்பட்டு 24 ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்த நிலையில் பஸ் நிலையத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கூரையின் சிமெண்ட் பூச்சு சேத மைடந்து அடிக்கடி உதிர தொடங்கியது. இதனால் பயணிகளுக்கும், வியாபாரி களுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. தாய்மார்கள் ஓய்வறை பராமரிப்பின்றி இருந்ததால் அதனை பயன்படுத்துவதை தவிர்க்க தொடங்கினர். மேலும் கழிவறைகள் பழுதடைந்து காணப்பட்டன.இதையடுத்து பஸ் நிலையத்தை முழுமையாக புனரமைப்பு செய்ய திட்ட மிடப்பட்டது. பயணி களுக்கான இருக்கைகள், குடிநீர் வசதி, பாதாள சாக்கடை, கழிவறை, வாகன நிறுத்துமிட வசதிகளை மேம்படுத்தவும் மாநகராட்சி சார்பில் முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் மாட்டுத்தாவணி பஸ் நிலையம் புதுப்பிப்பு, ஆம்னி பஸ் நிலையம் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வது தொடர்பாக டெண்டர் விடும் பணிகளை மாநகராட்சி தொடங்கி உள்ளது. டெண்டர் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு புதுப்பிக்கும் பணிகள் தொடங்கப்படும் என அதிகாரிகள் தெரிவிக்கின்ற னர். சேதமடைந்த மேற்கூரை கள், பைப் லைன்கள், மின் இணைப்புகளைமுழுமையாக புனரமைப்பு செய்யவும், காத்திருப்போர் மற்றும் பயணிகள் அமருவதற்கான வசதிகளை மேம்படுத்தவும், சுகாதார வசதிகளை மேம்படுத்தவும், தாய்மார் கள் பாலூட்டும் அறையை முழுமையாக புதுப்பிக்கவும், பஸ் நிலையத்திற்குள்ள ரோடுகளை செப்பனிட்டு சீரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# ஊராட்சி மன்ற அலுவலகங்களில் ஊராட்சி தலைவர்கள் மட்டுமே தேசியக் கொடி ஏற்ற வேண்டும்: கலெக்டர் எச்சரிக்கை

காஞ்சிபுரம், ஆக. 14




வேறுயாரும் தேசியக் கொடியை ஏற்றுவதாக குழப்பம் விளைவித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். உதவி இயக்குனர் அலுவலக எண்.0442723 7175 மற்றும் 74026 06005 ஆகிய தொலைபேசி எண்களில் புகார் அளிக்கலாம்.

காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வருகின்ற 15ம் தேதி சுதந்திர தினத்தன்று கிராமசபைக் கூட்டம் நடைபெறும். மேலும், அனைத்து கிராம ஊராட்சி மன்ற அலுவலகங்களில் சம்மந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள் மட்டுமே தேசியக் கொடியை ஏற்றி உரிய மரியாதை செலுத்த வேண்டும். அவர்களுக்கு பதிலாக வேறுயாரும் தேசியக் கொடியை ஏற்றுவதாக குழப்பம் விளைவித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த தலைவர்கள் தேசியக் கொடியை ஏற்றுவதை தடுக்கும் விதமாக யாரேனும் செயல்பட்டால் அவர்களின் மீது தீண்டாமை மற்றும் வன்கொடுமை சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். கிராம ஊராட்சிகளில் தேசியக் கொடி ஏற்றுவது தொடர்பாக பிரச்சினை இருந்தால் காஞ்சிபுரம் உதவி இயக்குனர் அலுவலக எண்.044 2723 7175 மற்றும் 74026 06005 ஆகிய தொலைபேசி எண்களில் புகார் அளிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# வேலைவாய்ப்பு முகாமில் 307 பேருக்கு பணிநியமன ஆணை வழங்கல்

தஞ்சாவூர், ஆக. 14



முகாமில் மொத்தம் 2,973க்கும் மேற்பட்ட வர்கள் கலந்து கொண்டனர். அதில் 22 பேர்கள் திறன் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தஞ்சை மன்னர் சரபோஜி அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது. முகாமிற்கு கலெக்டர் தீபக்ஜேக்கப் தலைமை தாங்கினார். முகாமில் சென்னை, திருப்பூர், கோவை, காஞ்சீபுரம் மற்றும் தஞ்சை உள்ளிட்ட ஊர்களிலிருந்து வந்த தனியார் முன்னணி தனியார் நிறுவனங்கள் உட்பட 140 க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் கலந்துகொண்டன.

இம்முகாமில் 18 வயது முதல் 40 வரை உள்ள 5ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்தோர், டிப்ளமோ, ஐ.டி.ஐ., பட்டதாரிகள். நர்சிங் மற்றும் பி.இ படித்த இளைஞர்கள், இளம் பெண்கள் என மொத்தம் 2,973க்கும் மேற்பட்ட வர்கள் கலந்து கொண்டனர். இதில் 307 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. 296 நபர்கள் இரண்டாம் கட்ட தேர்விற்கும், 22 நபர்கள் திறன் பயிற்சிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மேயர் சண்.ராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷாபுண்ணிய மூர்த்தி, மகளிர் திட்ட அலுவலர் கோவிந்தராஜ், கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலர் சக்திவேல் மற்றும் பல்வேறு அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை குறைந்தது

போரூர், ஆக. 14



தக்காளியின் வரத்தும் இன்று அதிகரித்து 36 லாரிகளில் வந்து இருந்தன. தக்காளி, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவற்றின விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

சென்னை கோயம்பேடு, காய்கறி மார்க்கெட்டுக்கு இன்று 470லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்கு குவிந்தது. விலை உச்சத்தில் இருந்த தக்காளியின் வரத்தும் இன்று அதிகரித்து 36 லாரிகளில் வந்து இருந்தன. வரத்து அதிகரிப்பு காரணமாக பீன்ஸ், ஊட்டி கேரட், கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய் உள்ளிட்ட பச்சை காய்கறிகளின் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த வாரம் மொத்த விற்பனை கடைகளில் ஒரு கிலோ ரூ.70க்கு விற்கப்பட்ட பீன்ஸ் படிப்படியாக விலை குறைந்து இன்று கடும் வீழ்ச்சி அடைந்தது. ஒரு கிலோ பீன்ஸ் ரூ40க்கு விற்கப்படுகிறது. ஆனால் அதையும் வாங்கி செல்ல சில்லறை வியாபாரிகள் யாரும் அதிகளவில் ஆர்வம் காட்ட வில்லை. இதேபோல் கடந்த மாதம் உச்சத்தில் இருந்து வந்த தக்காளி, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவற்றின விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. தக்காளி மொத்த விற்பனை கடைகளில் கிலோ ரூ.50க்கும் சில்லறை விற்பனை கடைகளில் ரூ.70 முதல் ரூ.80 வரையும் விற்கப்படுகிறது. கோயம்பேடு மார்க்கெட்டில் இன்றைய காய்கறிகள் மொத்த விற்பனை விலை விபரம் (கிலோவில்) வருமாறு: நாசிக் வெங்காயம்ரூ.28, சின்ன வெங்காயம்ரூ.60, உருளைக்கிழங்கு ரூ.30, பீன்ஸ்ரூ.40, ஊட்டி கேரட் ரூ.35, பீட்ரூட்ரூ.25, உஜாலா கத்தரிக்காய் ரூ.25, வரி கத்தரிக்காய் ரூ.20, முருங்கைக்காய் ரூ.30, அவரைக்காய் ரூ.25, வெண்டைக்காய்ரூ.15, கோவக்காய்ரூ.12, பாகற்காய் ரூ.35, முள்ளங்கிரூ.20, குடைமிளகாய்ரூ.40, புடலங்காய்ரூ.15, சுரக்காய்ரூ.10, பச்சை மிளகாய் ரூ.45, இஞ்சிரூ.190.

# மாரியம்மன் கோவிலில் தீமிதி திருவிழா

பெரம்பலூர், ஆக. 14



பெரம்பலூர் எழமூர் கிராமம் மாரியம்மன் கோவிலில் தீமிதி திருவிழா நடைபெற்றது ஏராளமான பக்தர்கள் விரதமிருந்து தீமிதித்தனர்

பெரம்பலூர் மாவட்டம் மங்களமேடு அருகே உள்ள எழமூர் கிராமத்தில் பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலின் திருவிழாவையொட்டி கடந்த 5ந் தேதி காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனை தொடர்ந்து மாரியம்மனுக்கு நாள்தோறும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. நேற்று தீமிதி திருவிழா நடைபெற்றது. இதையொட்டி விரதம் இருந்த பக்தர்கள் தீமிதித்தனர். விழாவில் எழமூர், ஓலைப்பாடி, வயலூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். மங்களமேடு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# பவானி ஊராட்சிக்கோட்டையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்

பவானி, ஆக. 14



பவானி அருகில் உள்ள ஊராட்சிக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலக வளாகத்தில் மாவட்ட கலெக்டரின் உத்தரவுப்படி பவானி வட்ட வழங்கல் துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்றது. பவானி வட்ட வழங்கல் அலுவலர் பாலமுருகாயி தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் ஊராட்சிக் கோட்டை மற்றும் சுற்று வட்டார பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தங்களின் ரேஷன் கார்டில் பெயர் நீக்கல், பெயர் சேர்த்தல் போன்றவற்றிக்கு மனு வழங்கினர். அதேபோல் தாங்கள் வைத்திருந்த ரேஷன் கார்டு காணாமல் போயிருந்தால் பழைய ரேஷன் கார்டு ஜெராக்ஸ் மற்றும் உரிய ஆவணங்களளை கொண்டு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தால் அவர்களின் முகவரிக்கு ரேஷன் கார்டு கிடைக்க பெறும் என தகவல் தெரிவிக்கப்பட்டது. மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் நிலையில் தமிழக அரசின் உத்தரவுப்படி புதிய ரேஷன் கார்டு பெறுவதற்கான மனு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காரணத்தால் இந்த முகாமில் புதிய ரேஷன் கார்டு வேண்டி எந்த ஒரு மனுவும் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த முகாமில் ஊராட்சி கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் குணசேகரன், எழுத்தர் ஈஸ்வரன், ரேஷன் கடை விற்பனையாளர் ராதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# சீர்காழியில், மீனவர்கள் ஆலோசனை கூட்டம்

சீர்காழி, ஆக. 14



மீனவர்களின் நலனுக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அடுத்த மாதம் 18ந் தேதி தி.மு.க. சார்பில் ராமேஸ்வரத்தில் மீனவர்கள் மாநாடு நடைபெற உள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பஸ் நிலையம் அருகில் திமுக சார்பில் மாவட்ட அளவிலான மீனவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் நிவேதா முருகன் எம்எல்ஏ தலைமை தாங்கினார். பன்னீர்செல்வம் எம்எல்ஏ, கொள்ளிடம் ஒன்றிய குழு தலைவர் ஜெயபிரகாஷ், சீர்காழி நகர மன்ற தலைவர் துர்கா ராஜசேகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து .மகேந்திரன், ஜி என் ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் தேசப்பன் வரவேற்றார். கூட்டத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் கலந்து கொண்டு மீனவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு பேசியதாவது, மீனவர்கள் தங்கள் பகுதியில் உள்ள வளர்ச்சிப் பணிகள் குறித்து கோரிக்கை மனுக்களாக கொடுத்துள்ளீர்கள் இதனை அரசு கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கையை எடுக்கப்படும். தமிழக அரசு தற்பொழுது பல்வேறு கடற்கரை கிராமங்களில் மண் அரிப்பை தடுக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

மேலும் உப்பு நீர் ஊருக்குள் புகாத வகையில் பல்வேறு உப்பனாற்றில் தடுப்பணைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. துறைமுகங்கள் சீரமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மீனவர்களின் நலனுக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மீனவர் நலன்களை பாதுகாக்கும் வகையில் அடுத்த மாதம் 18ம் தேதி தி.மு.க. சார்பில் ராமேஸ்வ ரத்தில் மீனவர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இதில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் குடும்பத்தோடு கலந்து கொள்ள வேண்டும் என்றார். இந்த கூட்டத்தில் முன்னாள் எம் எல்ஏ குத்தாலம் கல்யாணம், மாவட்ட அறங்காவல் குழு தலைவர் சாமிநாதன், நகர செயலாளர் சுப்பராயன், ஒன்றிய செயலாளர்கள் பிரபாகரன், விஜயகுமார், மலர்விழி, கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட 28 மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவ நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கம்யூனிஸ்டு கட்சியினர் சாலை மறியல்

வேதாரண்யம், ஆக. 14



கருகிய பயிர்கள் ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் வழங்க வேண்டும். கிழக்கு கடற்கரை சாலையில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. நாகை மாவட்டம் தலைஞாயிறு அருகே உள்ள அருந்தவம்புலம் கடைத்தெருவில் கருகி வரும் குறுவை நெற்பயிரை காப்பாற்ற உரிய தண்ணீர்திறந்து விடக்கோரியும் கருகி போன நெற்பயிருக்கு நிவாரண தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.35 ஆயிரம் வழங்க வேண்டி மத்திய அரசை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒன்றிய செயலாளர் சந்தானகிருஷ்ணன் தலைமையில் சாலைமறியல் போராட்டம் நடைபெற்றது. மறியல் போராட்டத்தில் கட்சியின் நிர்வாகிகள் சம்பந்தம் ,மகேந்திரன், மங்கையர்கரசி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர் . இதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த வேதாரண்யம் துணை போலீஸ் சூப்பிரண்டு சுபாஷ் சந்திர போஸ், இன்ஸ்பெக்டர் ராதாகிருஷ்ணன், தாசில்தார் சுரேஷ் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததின் பேரில் சாலை மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. இதனால் திருத்துறைப்பூண்டி_ நாகப்பட்டினம் கிழக்கு கடற்கரை சாலையில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# சாதி மோதலில் பள்ளி மாணவன் தாக்கப்பட்டதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்: ஓ.பன்னீர்செல்வம் அறிக்கை

சென்னை, ஆக. 14



நாங்குநேரி பள்ளி மாணவர் சின்னத்துரை, அவரது சகோதரி தாக்கப்பட்டு உள்ளனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவருக்கும் தேவையான உயரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: 2006 2011தி.மு.க. ஆட்சியைப் போல, கடந்த 27 மாத கால தி.மு.க. ஆட்சியிலும் சாதிய மோதல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. சாதி பாகுபாட்டினால் ஏற்பட்ட பிரச்சினையால் நெல்லை மாவட்டம், நாங்குநேரி பள்ளி மாணவர் சின்னத்துரை, அவரது சகோதரி தாக்கப்பட்டு உள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவம் கடும் கண்டனத்திற்குரியது. மாணவர்களின் எதிர்காலத்திற்கு அச்சாரமாக விளங்கக்கூடிய பள்ளிகளில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவது மிகவும் கவலை அளிக்கிறது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவருக்கும் தேவையான உயரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தேவையான நிதி உதவியை தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும். சட்டம்ஒழுங்கை தன் கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, மாணவனை தாக்கியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கழிவுநீர் குளம்போல் தேங்கி நிற்பதால் சுகாதார சீர்கேடு

வேலூர், ஆக, 14



வேலூர் மாவட்டம், குடியாத்தம், நெல்லூர் பேட்டை ஊராட்சி லிங்குன்றம் அடுத்த கணபதி நகரில் சுமார் 200 வீடுகள் உள்ளன. இங்குள்ள மக்களின் வசதிக்காக தெருக்களின் ஓரம் கழிவுநீர் கால்வாய் கட்டப்பட்டு உள்ளது.குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் கால்வாய் மூலம், மோர்தானா அணையில் இருந்து நெல்லூர் பேட்டை பெரிய ஏரிக்கு மழைநீர் செல்லும் கால்வாயில் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டது. இதற்காக தற்போது குடியாத்தம் பேரணாம்பட்டு சாலையின் ஓரத்தில் செல்லும் மழைநீர் கால்வாயில், கழிவுநீர் செல்ல கால்வாய் கட்டப்பட்டது. பல்வேறு காரணங்களால் அந்தகால்வாய் பணி முழுமையடையாமல் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. தற்போது அந்த கால்வாயில் வரும் கழிவுநீர், பாதியில் கால்வாய் கட்டிடம் நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து செல்ல வழியில்லாமல் அதிகளவில் குளம்போல் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அந்த வழியாக செல்லும் பொதுமக்கள் மூக்கை பிடித்தபடியே செல்கின்றனர். பல நாட்களாக தேங்கிநிற்கும் கழிவுநீரில் கொசக்களின் உற்பத்தி அதிகரித்து, சுகாதார சீர்க்கேட்டை ஏற்படுத்துவதுடன், டெங்கு, மலேரியா உள்ளிட்ட நோய் தொற்றுகள் ஏற்படும் அபாயம் உள்ளது. இதுகுறித்து அந்த பகுதி மக்கள்கூறியதாவது: பொதுமக்களின் வசதிக்காக கடந்த 3 ஆண்டுக்கு முன்பு குடியிருப்பு பகுதியில் மட்டும் கழிவுநீர் கால்வாய் கட்டப்பட்டது. இதனைத்தொடர்ந்து 2ம் கட்டமாக குடியிருப்பில் இருந்து நெல்லூர் பேட்டை பெரிய ஏரிக்கு கழிவுநீர் எடுத்துசெல்ல கடந்த 2 மாதத்திற்கு முன்பு கால்வாய் விரிவாக்கம் செய்யப்பட்டது. அந்த பணியும் முழுமையாக முடியாததால், கழிநீர் குளம்போல் தேங்கி கொசு உற்பத்தி நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இரவு நேரத்தில் கொசுக்கள் துரத்தி, துரத்தி கடிப்பதால் நாங்கள் தூக்கத்தை இழந்து தவிக்கிறோம். மாலையில் கொசுக்கள் தொல்லை அதிகாம இருப்பதால் நாங்கள் வெளியே வராமல் வீட்டிற்குள்ளேயே முடங்கி கிடக்கும் சூழல் நிலவி வருகிறது. கழிவுநீர் தேங்கி நிற்கும் இடத்தில் இருக்கும் விவசாய நிலங்கள் அதிகளவில் பாதிப்படைகிறது. மழை காலங்களில், ஏரிக்கு வரும் மழைநீர் கழிவுநீரோடு கலந்து, விவசாய நிலத்தில் தேங்கி பயிர்களை நாசம் செய்கிறது. இதனால் மழை காலங்களில் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது. எனவே மக்களின் நலன் கருதி கால்வாய் கட்டும் பணியை முழுமையாக செய்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தனர்.

# நாங்குநேரி மாணவர் விவகாரம்: ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல ஆணைய உறுப்பினர் விசாரணை

நெல்லை, ஆக. 14

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணைய உறுப்பினர் ரகுபதி இன்று நெல்லை வந்தார். மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதா? என்பது பற்றி அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் விசாரணை நடத்தினார்.


நாங்குநேரியில் சக மாணவர்களால் பள்ளி மாணவர் தாக்கப்பட்டது சம்பந்தமாக விசாரணை நடத்த தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை நியமித்துள்ளார். பள்ளி மாணவர் தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சியினரும் கண்டனங்களை தெரிவித்து வரும் நிலையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணைய உறுப்பினர் ரகுபதி இன்று நெல்லை வந்தார். அவர் நாங்குநேரி பகுதியில் சட்டபூர்வமான உரிமைகள் மீறப்பட்டுள்ளதா?, மனித உரிமைகள்மீறப்பட்டுள்ளதா? என்பது பற்றி அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் விசாரணை நடத்தினார். பின்னர் தாக்குதலுக்கு உள்ளான மாணவர் சின்னத்துரை படித்த வள்ளியூரில் உள்ள தனியார் மேல்நிலைப்பள்ளியிலும் உறுப்பினர் ரகுபதி ஆய்வு செய்து விசாரணை நடத்தினார்.

# மது பழக்கத்தால் பல கோடி குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன நடிகை வனிதா



வினோத் குமார் தயாரிப்பில் எஸ்.பி.ராஜ்குமார் இயக்கத்தில் பிரபல நடன இயக்குனர் தினேஷ் மாஸ்டர் நாயகனாக நடித்திருக்கும் படம் 'லோக்கல் சரக்கு'. இதில் நாயகியாக உபாசனா நடித்திருக்கிறார். யோகி பாபு மிக முக்கியமன வேடத்தில் நடித்திருக்கும் இப்படத்தில் செண்ட்ராயன், சாம்ஸ், இமான் அண்ணாச்சி, சிங்கம் புலி உள்ளிட்ட பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்திருக்கிறார்கள். இந்தபட விழாவில் நடிகை வனிதா விஜயகுமார் பேசுகையில், இன்று சினிமாவுக்கு என்ன வேண்டுமோ அதை கொடுக்க கூடிய குழுவை கொண்டவர் ராஜேஷ் என்பது எனக்கு தெரியும். ஆனால், அவர் ஒரு நல்ல இசையமைப்பாளர் என்பதை நான் இன்று தான் தெரிந்துக்கொண்டேன். படத்தின் கதைக்களமும் எதார்த்தமானதாக இருக்கிறது. லைப் ஸ்டைல் என்பது வேறு, பழக்கம் என்பது வேறு, எனவே எதையும் நம்மால் மாற்ற முடியாது. டெக்னாலஜி காரணமாக எதையும் நாம் தடுக்க முடியாது. அதனால்கெட்டுப்போறவங்ககெட்டுபோகதான்செய்வாங்க,அதைப்பற்றிநாம்கவலைப்படதேவையில்லை. ஆனால், நடுத்தர வர்க்கத்தினர், அதற்கும் கீழே இருப்பவர்கள் குடி பழக்கத்திற்கு அடிமையாக இருப்பதால், எத்தனையோ குடும்பங்கள் பாதிக்கப்படுகிறது. அது இவ்வளவு பெரிய பிரச்சினைகளை கொடுக்கும் என்பது அனைவருக்கும் தெரியும், எனக்கு தனிப்பட்ட வாழ்க்கை முறையிலும் தெரியும். எனவே மதுவால் மக்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மிக நன்றாக இப்படத்தில் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் படம் பெரிய வெற்றி பெறும்." என்றார்.

# என் நிஜவாழ்க்கையில் பலசம்பவங்கள் நடந்துள்ளது ஆண்ட்ரியா



சினிமா பின்னணி பாடகியாக இருந்து பச்சைக்கிளி முத்துச்சரம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் ஆண்ட்ரியா. இதைத்தொடர்ந்து மங்காத்தா, விஸ்வரூபம்,தரமணி, வட சென்னை ஆயிரத்தில் ஒருவன் உள்பட பல படங்களில் நடித்தார். 36 வயது ஆகி உள்ள நிலையிலும் திருமணம் செய்யாமல் நடிகை ஆண்ட்ரியா படத்தில் 'பிசி'யாக உள்ளார். தெலுங்கில் இருந்து தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட புஷ்பா படத்தில் "ஊ சொல்றியா மாமா ஊ ஊ சொல்றியா மாமா" என்ற பாடலை பாடியிருந்தார். இந்த பாடல் பெரிய ஹிட்டாக அமைந்தது. இந்நிலையில் வெற்றிமாறன் இயக்கத்தில் அனல்மேல் பனித்துள்ளி என்ற படத்தில் நடித்து வரும் ஆண்ட்ரியா படம் குறித்து கூறியதாவது: அனல்மேல் பனித்துளி படத்தில் ஒரு காட்சியில் நடித்த போது கூச்சமாக இருந்தது. இது புதுமையாகவும் இருந்தது. இந்த காட்சிகளைவிட என் நிஜ வாழ்க்கையில் இதை விட பல சம்பவங்கள் நடந்துள்ளது. ஆண்ட்ரியா இந்த படத்தில் அரை நிர்வாணமாக நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.



# யோகிபாபு படத்தின் உரிமையை கைப்பற்றிய பிரபல நிறுவனம்

இயக்குனர் பாலாஜி வேணுகோபால் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'லக்கி மேன்'. இப்படம் வருகிற செப்டம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

தமிழ்திரையுலகில்பிரபலநகைச்சுவைநடிகராக இருந்து வருபவர்யோகிபாபு. பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ள யோகிபாபு, தற்போது தமிழ் திரையுலகில் தவிர்க்க முடியாத நகைச்சுவை நடிகராக வலம் வருகிறார். இவர்ரஜினி நடிப்பில் வெளியாகியுள்ள 'ஜெயிலர்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இயக்குனர் பாலாஜி வேணுகோபால் இயக்கத்தில் யோகிபாபு நடிக்கும் திரைப்படம் 'லக்கி மேன்'. இப்படத்தில் வீரா, ரேச்சல்ரெபேக்கா, அப்துல்லீ, ஆர்.எஸ்.சிவாஜி, அமித்பார்கவ், சாத்விக் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். திங்க் ஸ்டூடியோஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். உண்மையான அதிர்ஷ்டம் என்றால் என்ன என்பதைக் கண்டறியும் ஒரு மனிதனின் அதிர்ஷ்டத்தை மையமாக வைத்து உருவாகியுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு முழுவதும் சென்னை மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்றது. 'லக்கி மேன்' படத்தின் போஸ்டர்அண்மையில்வெளியாகிகவனம்ஈர்த்தது.லக்கிமேன்போஸ்டர்இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'லக்கி மேன்' படத்தின் தமிழ்நாடு வெளியீட்டு உரிமையை சக்தி பிலிம் பேக்டரி நிறுவனம் கைப்பற்றியுள்ளது. இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளனர். 'லக்கி மேன்' திரைப்படம் செப்டம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 64 ஆண்டுகள் ஒருவன் வாழ்க, என்று வாழ்த்தினாலே அது பெரிய ஆசிதான் கமல்ஹாசன்



பல விருதுகளை குவித்துள்ள நடிகர் கமல்ஹாசன் திரையுலகில் அறிமுகமாகி 64 வருடங்கள் நிறைவுபெற்றுள்ளது. பலரும் தங்களது வாழ்த்துக்களை கமல்ஹாசனுக்கு தெரிவித்து வருகின்றனர்.

நடிகர், பாடகர், தயாரிப்பாளர் என பன்முகத் தன்மைக் கொண்ட நடிகர் கமல்ஹாசன் தமிழ் திரையுலகில் தவிர்க்க முடியாத நடிகராக வலம் வருகிறார். 1960ஆம் ஆண்டு வெளியான 'களத்தூர் கண்ணம்மா' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி தேசிய விருது, பத்ம ஸ்ரீ விருது, கலைமாமணி விருது எனபல விருதுகளைகுவித்துள்ளநடிகர்கமல்ஹாசன்திரையுலகில்அறிமுகமாகி 64 வருடங்கள் நிறைவுபெற்றுள்ளது.

இதனைஇவரதுரசிகர்கள்கொண்டாடிவருகின்றனர்.பலரும்தங்களதுவாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். வாழ்த்தியவர்களுக்கு என் சிரம் தாழ்த்தி பணிவுடன் நன்றி என கமல்ஹாசன் சமூக வலைத்தள பக்கத்தில் கூறியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில், 64 ஆண்டுகள் ஒருவன் வாழ்க, என்று வாழ்த்தினாலே அது பெரிய ஆசிதான். அது என் உடலுக்கான வாழ்த்தாக இல்லாமல் என் கலை வாழ்வுக்கான ஆசியாக இருப்பது என்னைவிட திறமையாளர்கள் பலருக்கும் கிட்டா வரம். வாழ்த்தும் அனைவருக்கும் என் சிரம் தாழ்த்தி பணிவுடன் நன்றி. எஞ்சி உள நாட்கள் என் மக்களுக்காக.

# கனடா ஓபன் டென்னிஸ் காலிறுதியில் மெத்வதேவ், அல்காரஸ் அதிர்ச்சி தோல்வி

கனடா ஓபன் டென்னிஸ் தொடர் மாண்ட்ரியல் நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் நாளையுடன் முடிவடைய உள்ளது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி போட்டி ஒன்றில் டென்னிஸ் தரவரிசையில் 2ம் நிலை வீரரான ரஷியாவின் டேனில் மெத்வதேவ், ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாருடன் மோதினார்.

இதில் டி மினார் 76 (97), 75 என்ற கணக்கில் வென்று அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். இதேபோல், டென்னிஸ் தரவரிசையில் முதல் இடத்தில் உள்ள ஸ்பெயின்வீரர்கார்லோஸ்அல்காரஸ், அமெரிக்கவீரர்டாமிபாலுடன்மோதினார். இதில் டாமி பால் 63, 46, 63 என்ற கணக்கில் கார்லோசை வென்று அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.





# ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி சாம்பியன் பட்டம் வென்றது இந்தியா

முதல் பாதியில் மலேசியா 31 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் இந்தியா 3 கோல்களை அடித்து அசத்தியது. 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இந்நிலையில், இன்று இரவு 8.30 மணிக்கு தொடங்கிய இறுதிப்போட்டியில் இந்திய அணி மலேசியாவுடன் மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியில் மலேசியா 31 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் இந்திய வீரர்கள் 3 கோல் அடித்து அசத்தினர். இறுதியில், இந்திய அணி 43 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தி 4வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது.

# வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான 5வது டி20 போட்டி தொடரை கைப்பற்றுமா இந்தியா?

இந்திய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் பங்கேற்று ஆடி வருகிறது. இதுவரை 4 போட்டிகள் நிறைவடைந்த நிலையில் இரு அணிகளும் 22 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளது. முதல் இரண்டு போட்டிகளில் வெஸ்ட் இண்டீஸ் அணியும், அடுத்த இரு போட்டியில் இந்திய அணியும் வெற்றி பெற்றன. இந்நிலையில், இவ்விரு அணிகள் இடையிலான 5வது டி20 போட்டி அமெரிக்காவில் இன்று நடைபெற உள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றும் முயற்சியில் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்பதால் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

இந்திய நேரப்படி ஆட்டம் இரவு 8 மணிக்கு தொடங்குகிறது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள சென்ட்ரல் ப்ரோவர்ட் ரீஜினல் பார்க் ஸ்டேடியம் டர்ப் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது.



Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.